

## நான் ஏன் பிராந்தியப் பக்கவாத மையத்தில் இருக்கிறேன்?

டொரான்டோ பாராமெடிக்ஸ் உங்களை மதிப்பீடு செய்து, நீங்கள் பக்கவாதத்தின் ஆரம்பக் கட்டங்களில் இருக்கலாம் எனத் தீர்மானித்துள்ளது.

நீங்கள் அருகாமையில் உள்ள பிராந்தியப் பக்கவாத மையத்திற்கு (டொராண்டோ வெஸ்ட்டர்ன் (Toronto Western), செயிண்ட் மைக்கேல்’ஸ் (St. Michael's) அல்லது சன்னிபுரூக் (Sunnybrook) மருத்துவமனை) மேற்கொண்டு மதிப்பீடு செய்வதற்காக அழைத்து வரப்பட்டுள்ளீர்கள்.

இது மருத்துவத் திசைமாற்றச் செயல்முறை என்றழைக்கப்படுகிறது. தேவையுள்ள நபர்கள் ஒரு பிராந்தியப் பக்கவாத மையத்திலிருந்து குறித்த நேரத்திற்கான சேவைகளைப் பெற முடிவதை உறுதிசெய்வதற்கு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## திருப்பியனுப்புதல் செயல்முறை

திருப்பியனுப்புதல் என்பது உங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஒரு மருத்துவமனையில் உள்ள பொருத்தமான சிகிச்சைப் பிரிவிற்கு நீங்கள் இடமாற்றப்படுவீர்கள் என்று பொருளாகும். பிராந்தியப் பக்கவாத மையத்திடமிருந்து சிறப்புச் சேவைகளைப் பெறுவதற்கு அவசியம் இருக்கக்கூடிய மற்ற நபர்களும் கூட அவற்றைப் பெறுவதை உறுதிசெய்வதற்கு இச்செயல்முறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தேவைப்படும் பராமரிப்பையும் சேவைகளையும் நீங்கள் சரியான அளவில் பெறுகிறீர்களா என்பதை உங்கள் முதன்மை மருத்துவமனை உறுதிசெய்யும். அவர்களால் மேற்கொண்டு மதிப்பீடுகளை, பராமரிப்பை மற்றும் மறுவாழ்வுச் சிகிச்சையை வழங்க முடியும் அல்லது உங்களுக்கு ஏற்ற ஒரு இடத்திற்கு உங்களை அனுப்பிவைக்க முடியும்.

RSC உங்களுடைய முதன்மை மருத்துவமனை என்றால், நீங்கள் மருத்துவமனையிலேயே தொடர்ந்து இருப்பீர்கள்.

Toronto Stroke Networks

• Leadership • Innovation • Collaboration

மேல் விவரங்களுக்கு எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்:

**www.tostroke.com**





# பக்கவாதம் மற்றும் திருப்பியனுப்புதல் (REPATRIATION) செயல்முறைக்கான மருத்துவத் திசைமாற்றம் (MEDICAL REDIRECT)

TAMIL

## பிராந்தியப் பக்கவாத மையம் என்பது என்ன?

பிராந்தியப் பக்கவாத மையம் (Regional Stroke Centre - RSC) என்பது நீங்கள் 24 மணிநேரமும் பக்கவாதச் சிகிச்சையைப் பெற இயலும் ஒரு தீவிரப் பராமரிப்பு மருத்துவமனையாகும். இந்த மையங்கள் அவசரநிலைப் பக்கவாதப் பராமரிப்பில் நிபுணத்துவம் பெற்றவை. மேலும், பிற மருத்துவமனைகளில் இல்லாத உபகரணங்களையும் சிகிச்சைத் தேர்வுகளையும் இவை கொண்டிருக்கின்றன.

உங்களுக்குப் பக்கவாதம் ஏற்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு நீங்கள் பரிசோதனை செய்யப்படுவீர்கள். இந்தப் பரிசோதனைகளில் மூளை ஸ்கேன்களும் இரத்தப் பரிசோதனைகளும் உள்ளடங்கலாம்.

## எனக்கு பக்கவாதம் இருந்தால் என்னவாகும்?

**பிராந்தியப் பக்கவாத மையங்களில் அளிக்கப்படும் சிகிச்சை**

உங்களுக்கு பக்கவாதம் இருந்தால், உங்களுடைய பக்கவாதத்தின் வகையைப் பொறுத்து, சிகிச்சைக்கான சிறந்த விருப்பத்தேர்வை பக்கவாதக் குழு தீர்மானிக்கும்.





விருப்பத்தேர்வுகளில் உள்ளடங்குவன:

- டிஷூ பிளாஸ்மினோஜென் ஆக்டிவேட்டர் (tissue plasminogen activator - tPA) என்றழைக்கப்படும் இரத்த உறைவை முறிக்கும் மருந்து
- பிற சிறப்புச் சிகிச்சைகள் அல்லது இடையீட்டுச் சிகிச்சைகள்

## அடுத்து என்ன நிகழும்?

உங்களுக்கு RSC -யிடமிருந்து எந்தச் சிறப்பு பக்கவாதச் சேவைகளும் **தேவையில்லை** எனில், உங்கள் பராமரிப்பைத் தொடர்வதற்கான ஒரு பக்கவாத சிகிச்சைப் பிரிவை வைத்திருக்கின்ற, உங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு நீங்கள் இடமாற்றம் செய்யப்படுவீர்கள்.

உங்களுக்கு **RSC** -இல் சிகிச்சை **தேவையெனில்,** உங்கள் சிகிச்சைக்காக நீங்கள் RSC -இல் தொடர்ந்து இருப்பீர்கள். அதன் பிறகு உங்கள் பராமரிப்பைத் தொடர்வதற்கான ஒரு பக்கவாத யூனிட்டை வைத்திருக்கின்ற, உங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு நீங்கள் இடமாற்றம் செய்யப்படலாம்.

இதுவே திருப்பியனுப்புதல் என்றழைக்கப்படுகிறது.

## எனக்கு பக்கவாதம் இல்லையென்றால் என்னவாகும்?

உங்களுக்குப் பக்கவாதம் இல்லையென்று உங்கள் பராமரிப்புக் குழு தீர்மானிக்கிறதெனில், உங்கள் பராமரிப்பைத் தொடர்வதற்கு நீங்கள் உங்களுடைய முதன்மை மருத்துமனைக்கு இடமாற்றம் செய்யப்படுவீர்கள்.

இதுவும் கூட திருப்பியனுப்புதல் என்றழைக்கப்படுகிறது.